DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC.94/2022
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for
**பெயர் பெருமாள்**

**தகப்பனார்பெயர் ஆறுமுகம்**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13/03/2023

**குறுக்கு விசாரணை**

1.) எதிரியை எனக்கு 10 வருடங்களாக தெரியும். ஆராகிய தாஸ் ஆசிரியர் மூலம் எதிரியை எனக்கு தெரியும். எனது அப்பா வேலை செய்த பள்ளியின் ஆசிரியராக எதிரி இருந்தது எனக்கு தெரியும். எதிரியின் சகோதரர் குருஷாத்தராக் எனக்கு பழக்கம் ஆனவர். எதிரியின் சித்தி சமாதானமும் எனக்கு பழக்கமானவர். புகாரில் சொல்லப்பட்டுள்ள எதிரியின் முகவரியில் எதிரி எத்தனை வருடங்களாக குடியிருக்கிறார் என்றால் ஞாபகமில்லை. எதிரியிடம் அவர் வீட்டிற்கு சென்று நேரில் கேட்டிருக்கிறேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. கடந்த 5 வருடங்களாக புகாரில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் எதிரி வசிக்கவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2.). எதிரியின் அப்பா ராஜா சாலமனை நான் பார்த்திருக்கிறேன். அவரிடம் எதிரி எனக்கு பணம் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறேனா என்றால் இல்லை. எந்த தேதியில் நான் கடன் கொடுத்தேன் என்றால் 10-08-2021 ல் கடன் கொடுத்தேன். எதிரியின் தகப்பனாருடைய மருத்துவசெலவிற்காக பணம் கொடுத்தேன். எதிரியின் தகப்பனார் 01-01-2016 ல் இறந்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இறந்துவிட்டார் என்று தெரியும் தேதி ஞாபகமில்லை.

3.) 2016 ல் எதிரியின் தகப்பனார் இறந்துவிட்ட நிலையில் 2021 ல் அவருடைய மருத்துவ செலவிற்காக எதிரி கடன் வாங்கியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை மட்டும் தான் எதிரியின் காசோலை என்னிடம் உள்ளது. எதிரிக்கு பணம் கொடுக்கும் போது வேறு ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கியிருக்கிறேனா என்றால் பாண்டு எழுதி வாங்கியிருக்கிறேன். அந்த பாண்டை பார்த்தால் எந்த தேதியில் எதிரிக்கு நான் எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

4.) அந்த பாண்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் அந்த பாண்டு எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை. காலஅவகாசம் கொடுத்தால் தேதி கண்டுபிடித்து தாக்கல் செய்ய முடியுமா என்றால் எங்கு இருக்கிறது என்று தெரியாது. தேடிப்பார்த்து கிடைத்தால் தாக்கல் செய்கிறேன். எத்தனை பாண்டுகள் இருக்கிறது என்றால் ஞாபகமில்லை. எத்தனை பாண்டுகள் இருக்கிறது என்று ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வறுமை கோட்டிற்கு கீழ் வசிக்கக்கூடிய நபர் என்றால் சரிதான். 2021 ம் ஆண்டு ஜீன் மாதம் கொரோனா பரவல் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

5.)ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் யாரும் வெளியே வரமுடியாது என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் எதிரி கடன் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தும் நபர் இல்லை என்றால் இல்லை தான். பைனான்ஸ் நடத்துவதற்கும் வட்டிக்கு பணம் கொடுப்பதற்கும் உரிமம் வாங்கவில்லை என்றால் சரிதான். காசோலை எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் 09-06-2022 ம் தேதி திருப்பப்பட்டது.

6.) கையெழுத்து மாறுபாடாக உள்ளது என்றும் போதிய பணம் இல்லை என்றும் திருப்பப்பட்டது. காசோலை திருப்பியதற்கான வங்கி குறிப்பாணையில் போதிய பணமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. எனக்கும் குருஷாத்தராக் மற்றும் சமாதானம் ஆகியோருக்கும் இடையே பணபரிமாற்றம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் குருஷாத்தராக் என்பவர் ரூபாய் 1 லட்சம் பணம் வாங்கிக்கொண்டு பாண்டு எழுதிகொடுத்திருக்கிறார் என்றாலும் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டு பாண்டை பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான் அவர் 4 லட்சம் வாங்கியிருந்தார் திருப்பி கொடுத்துவிட்டார்.

7.) அந்த பாண்டில் எதிரி சாட்சி கையொப்பம் போட்டிருக்கிறார் என்றால் பாண்டை பார்த்தால் தான் தெரியும். 10 லட்சம் ரூபாய் பணத்தை எவ்வாறு கடன் கொடுத்தேன் என்றால் நகை அடகு வைத்து பணத்தை கொடுத்தேன்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**